ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂமானது

අංක 1829/39 - 2013 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.09.27

*1829/39 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்கள்**

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின (235 ஆம் அத்தியாயமான) 103 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்).*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2013, செத்தெம்பர் 20.*

*பிரிவு 103*

**ஒழுங்குவிதிகள்**

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 103 இன் கீழ் ஆக்கப்பட்டு, 2007 ஒக்றோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதான ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன;*

*1. ஒழுங்குவிதி 1 ஆனது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதி பதிலீடுசெய்யப்படுகிறது.*

*"1. இந்த ஒழுங்குவிதி சுங்க (மேலதிகநேர, சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ கட்டணங்கள் நிதியம்) ஒழுங்குவிதிகள் 2007"*

*2. ஒழுங்குவிதி 2 ஆனது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதி பதிலீடுசெய்யப்படுகிறது.*

*"2. சுங்க அலுவலர்களால், அத்தகைய அலுவலர்களுக்கென நியமிக்கப்பட்ட பொதுவான வரவு நேரங்களுக்கும் வெளியே அல்லது சுங்க இல்லம் அலுவலர்களுக்கு மூடப்பட்டிருக்கும் நாட்களில் ஆற்றப்பட்ட சேவைகளுக்கு கட்டணங்களாக அல்லது விதிப்பனவுகளாக அறவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும், எவரேனும் சுங்க அலுவலர், அவரது உரிய அலுவலகம் அல்லது தொழில் புரியும் இடம் அல்லாத இடத்தில் அல்லது ஏதாவது அலுவலகத்தில் வருகை தருவதற்கான கட்டணங்களாக அல்லது விதிப்பனவுகளாக அறவிடப்படும் எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் ஆற்றப்பட்ட தொழில்சார் நிபுணத்துவச் சேவைகளுக்கான கட்டணங்களாக அறவிடப்பட்ட அனைத்துப் பணத்தொகைகளும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான அட்டவணை "அ" இல் அல்லது அட்டவணை "ஆ" இல் அல்லது அட்டவணை "இ" இல் அல்லது அட்டவணை "ஈ" இல் அல்லது அட்டவணை "உ" இல் அல்லது அட்டவணை "ஊ" இல் அல்லது அட்டவணை "எ" இல் அல்லது அட்டவணை "ஏ" இல் அல்லது அட்டவணை "ஐ' இல் தரப்பட்டதன் பிரகாரம், சுங்க மேலதிக நேர கப்பற்சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்றில் முறையே சுங்க மேலதிக நேரக் கணக்கு மற்றும் சுங்க கப்பற் சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் கணக்கு மற்றும் சுங்க தொழில்சார் நிபுணத்துவங்கள் கணக்கு என அழைக்கப்படும் மூன்று வெவ்வேறு கணக்குகளின் கீழ் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த அறிவித்தலில் ஏதாவது பிற ஒழுங்குவிதிகளுக்கு எதிரான நிபந்தனைகள் இருப்பினும், விண்ணப்பதாரர்களது வசதிக்காகவும் மற்றும் மேலதிக கொடுப்பனவினை இலகுவாக கணிப்பதற்குமாக அத்தியாயம் 'அ' வினது 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சேவைகளுக்காக விண்ணப்பமானது செய்து முடிக்கப்பட்ட வேலையின் நேரத்தினை கவனத்திற் கொள்ளாது அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கலன்களது எண்ணிக்கை, சரக்குத் தொகைகளது எண்ணிக்கை (உலர்/திரவம்), வாகனங்களது எண்ணிக்கை, கலங்களது எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்களை சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஏற்றுக்கொள்ளலாம். இந்த தொகையானது அலுவலக நேரத்தின் பின்னர் புரியப்பட்டதாக அல்லது சுங்க இல்லமானது கடமைக்காக மூடப்பட்டிருந்த தினங்களில் புரியப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்".

3. ஒழுங்குவிதி 5 இற்கு உடனகத்துப் பின்னர் பின்வரும் ஒழுங்குவிதி சேர்க்கப்படுகிறது.

"5(அ). சுங்க தொழில்சார் நிபுணத்துவ சேவைக்கட்டண கணக்கின் பணம் பின்வரும் முறையில் கையுதிர்க்கப்படலாம். இலங்கை முதலீட்டுச் சபை அல்லது பிற ஏதேனும் அரச சார்பான அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதி முகாமைத்துவத்தில் விசேடத்துவமிக்க சேவையினை வழங்குகின்ற சுங்கத்தின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பக அலுவலர்களுக்கு, நிதி அமைச்சின் செயலாளரினது அங்கீகரிக்கப்பட்டதொரு திட்டத்திற்கிணங்க பணிப்பாளர் நாயகம் ஊதியம் வழங்கலாம்"

4. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 103 2(அ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2007.10.26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலிலான ஏற்றுமதிச் சரக்குப் பரிசோதனைக் கட்டணம் என விபரிக்கப்பட்டுள்ள அட்டவணை "ஏ" இன் 2ஆம் பந்தி பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது.

2.(i) பிரயாணிகளின் பயணப் பொதிகள் தவிர, கப்பலேற்று ஏற்றுமதிச் சரக்குகளது பரிசோதனைக்கும் மற்றும் விடுவிப்புக்குமாக:

| | |
|---|---|
| (அ) கொள்களனினது அளவுக்கேற்ப, கொள்கலனில் முழுமையாக சுமைகளையுடையவை (FCL) | ஒவ்வொரு கொள்கலனுக்கும் ரூபா 550/- |

(ii) பிரயாணிகளின் பயணப் பொதிகள் தவிர, கொள்கலனில் முழுமையற்ற சுமைகளையுடைய (LCL) மற்றும் கொள்கலன்களில் அடைக்கப்படாத பெருந்தொகை சரக்கு என்பவற்றினது கப்பலேற்றுச் சரக்குகளது பரிசோதனைக்கும் மற்றும் விடுவிப்புக்குமாக:

| | |
|---|---|
| (அ) பொருட்களது பெறுமதியானது ரூபா 10,000/- க்கு குறைவாகவும் மற்றும் கொள்கலனில் முழுமையற்ற சுமைகளையுடைய (LCL) அல்லது ஏதேனும் பெருந் தொகை சரக்கு வகைகளிலானவை | விலக்களிப்பு |
| (ஆ) கொள்கலனில் முழுமையற்ற சுமைகளையுடைய (LCL) சரக்குகளது பெறுமதி ரூபா 10,000/- க்கு அதிகமாகவிருப்பின் | ஒவ்வொரு சுங்கப்பிரகடனத்திற்கும் ரூபா 300/- |
| (இ) கொள்கலன்களில் அடைக்கப்படாத ஏதேனும் வகையான பெருந்தொகை சரக்கினது பெறுமதி ரூபா 10,000/-க்கு அதிகமாகவிருப்பின் | ஒவ்வொரு மெற்றிக் தொண்ணுக்கும் ரூபா 20/- |

(iii) பிரயாணிகளின் பயணப் பொதிகள் தவிர, விமானம் மூலமான கப்பலேற்றுச் சரக்கினது பரிசோதனைக்கும் மற்றும் விடுவிப்புக்குமாக:

| | |
|---|---|
| (அ) சரக்கினது பெறுமதியானது ரூபா 10,000/- க்கு குறைவாகவிருப்பின் | விலக்களிப்பு |
| (ஆ) சரக்கினது பெறுமதியானது ரூபா 10,000/- க்கு அதிகமாகவிருப்பின் | ஒவ்வொரு சுங்கப்பிரகடனத்திற்கும் ரூபா 300/- |

5. அத்தகைய ஒழுங்குவிதிகளின் அட்டவணை "ஏ" இன் முடிவில் பின்வரும் புதிய அட்டவணை சேர்க்கப்படுகிறது:-

**அட்டவணை 'I'**

தொழில்சார் நிபுணத்துவ கட்டணம்

இலங்கை முதலீட்டுச் சபை அல்லது பிற ஏதேனும் அரச சார்பான அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதி முகாமைத்துவத்தில் 'அசிகுடா வேல்ட்' தொழில்நுட்ப வசதியினை வழங்கும் வகையில் அத்தகைய சேவைப் பாவனையாளரிடமிருந்து ஒரு பாவனையாளருக்கு மாதாந்த கட்டணமாக 8,000 ரூபா அறவிடப்படும். இவ்வாறு கணிப்பிடப்படுகின்ற குறித்ததொரு மாதத்துக்குரிய பணமானது அடுத்து வருகின்ற மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் சுங்க மேலதிக நேர, சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ கட்டணங்கள் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும்.

10-521

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.